# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අතිවිசேஷமானது

අංක 1941/26 - 2015 නොවැම්බර් මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.11.19

*1941/26 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

### சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2015 இன் இல. 389/1*

*ச. அ. இல.: சிஎஸ்ஏ/1/24/1/1.*

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 52(1) ஆம் உறுப்புரையின் கீழ், 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09ஆந் திகதியிலிருந்து திரு. முருகேசு கணேஷமூர்த்தி அவர்கள் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. பீ. அபேகோன்,
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2015, நவெம்பர் 18.

12 - 186/1

---

*2015 இன் இல. 389/2*

*ச. அ. இல.: சிஎஸ்ஏ/1/24/1.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் நியமனம் செய்யப்பட்டு 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 1932/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கீழ்க்காணும் அமைச்சர்களின் அமைச்சர் பதவிகளானது அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு, அவர்களின் பெயர்களுக்கு முன்னால் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 01. புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு டி. எம். சுவாமிநாதன், பா. உ. அவர்கள் | - | "சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள்" அமைச்சராக |

02. தென் அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு சாகல கஜேந்திர ரத்நாயக்க, பா.உ. அவர்கள் - "சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி" அமைச்சராக

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. பீ. அபேகோன்,
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2015, நவெம்பர் 18.

12 - 186/3

---

## அரசாங்க அறிவித்தல்கள்

### அறிவித்தல்

ச. அ. இல.: சிஎஸ்ஏ/1 /24/1.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43(2) ஆம் உறுப்புரையின்கீழ், உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால், சட்டமும் ஒழுங்கும் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு திலக் ஜனக மாரப்பன அவர்கள், 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதியிலிருந்து அரசியலமைப்பின் 46 (3) (ஆ) ஆம் உறுப்புரையின் கீழ், சொல்லப் பட்ட அமைச்சர் பதவியிலிருந்து கேட்டு விலகியுள்ளார் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. பீ. அபேகோன்,
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2015, நவெம்பர் 18.

12 - 186/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.